## தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை-600 032.
தொலைபேசி: 044-22201337, நிகரி: 044-22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை அவர்கள் முன்பாக**

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*************

**முறையீட்டு மனு எண்.0236/2015**

**ஆணை எண். 13 /2015**

**நாள்: 14/10/2015**

திரு. அ. மனமோகனதாசன்,
பொற்படாக்குறிச்சி ஊராட்சி,
தச்சூர் அஞ்சல்,
கள்ளகுறிச்சி வட்டம்,
விழுப்புரம் மாவட்டம்

- முறையீட்டு மனுதாரர்

திருமதி. வளர்மதி,
க/பெ. திரு. மாயவன்,
செம்படாக்குறிச்சி ஊராட்சி தலைவர்,
கள்ளகுறிச்சி ஒன்றியம்,
சங்கராபுரம் வட்டம்,
விழுப்புரம் மாவட்டம்.

- எதிர் மனுதாரர்

விழுப்புரம் மாவட்டம், கள்ளகுறிச்சி வட்டம், பொற்படாக்குறிச்சி ஊராட்சியை சேர்ந்த திரு. அ. மனமோகனதாசன் என்பவர் செம்படாக்குறிச்சி ஊராட்சி மன்ற தலைவர் திருமதி. வளர்மதி, க/பெ. திரு. மாயவன் என்பவர் போலியாக இந்து–தொம்பன் (S.C.) என சாதி சான்று பெற்று தலைவர் பதவி வகித்து வருகிறார் என இம்முறைமன்றத்தில் முறையீடு செய்துள்ளார். இம்மனுவானது இம்முறைமன்ற நடுவத்தில் மனு எண்.236 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

## ஆணை

விழுப்புரம் மாவட்டம், கள்ளகுறிச்சி வட்டம், பொற்படாக்குறிச்சி ஊராட்சியை சேர்ந்த திரு. அ. மனமோகனதாசன் என்பவர் செம்படாக்குறிச்சி ஊராட்சி மன்ற தலைவர் திருமதி. வளர்மதி, க/பெ. திரு. மாயவன் என்பவர் போலியாக இந்து–தொம்பன் (S.C.) என சாதி சான்று பெற்று தலைவர் பதவி வகித்து வருகிறார் என இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்பு முறைமன்ற சட்டம்–2014 சட்டப்பிரிவு 2 உட்பிரிவுகள் 7** மற்றும் 11–ல் அளிக்கப்பட்டுள்ள விளக்கத்தின்படி **ஊராட்சி மன்றங்கள் மற்றும்** தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் இவ்வமைப்பின் விசாரணை வரம்பிற்கு உட்பட மாட்டார்கள். எனவே இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்ட முறையீட்டு மனுவை விழுப்புரம் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி வைக்க தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவம் முடிவு செய்து அதன்படி ஆணையிடுகிறது.

ஒம்/– முனைவர் சோ. அய்யர்
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

(முத்திரை: உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் ... சென்னை–600 032)

**//உண்மை நகல் / உத்தரவின்படி / அனுப்பப்படுகிறது//**

(கையொப்பம்) 14/10/15
கண்காணிப்பாளர்

**பெறுநர்**

**மாவட்ட ஆட்சித் தலைவர்,**
**விழுப்புரம் மாவட்டம்,**
**விழுப்புரம் (இணைப்புடன்)**

**நகல்**

திரு. அ. மனமோகனதாசன்,
பொற்படாக்குறிச்சி ஊராட்சி,
தச்சூர் அஞ்சல்,
**கள்ளகுறிச்சி வட்டம்,**
**விழுப்புரம் மாவட்டம்**